# புவியியற் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்

## தேசிய மட்டத்திலான பட வரைதல் போட்டி - 2021

2021 ஜூன் 5 ஆம் திகதியில் கொண்டாடப்படும் உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு, கொழும்புப் பல்கலைக்கழகப் புவியியற் துறையானது தேசிய அளவிலான பட வரைதல் போட்டியொன்றை (N.L.M.C-01) நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. தமது சுற்றுச்சூழல் தொடர்பாக மாணவர்களின் ஆக்கப்பூர்வமான கற்பனையை வளர்க்கும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் இப்போட்டியினை ஒழுங்கமைப்பதற்குப் புவியியற் துறை திட்டமிட்டுள்ளது. மேலும், படங்களை தயாரிப்பதில் இளம் தலைமுறையினரின் ஈடுபாட்டினை அதிகரிப்பதையும், முறையான படவரைகலையியல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் வெவ்வேறு பட வரைதல் முறைகள் தொடர்பான கவனத்தை மேம்படுத்துவதையும் இப் போட்டி நோக்கமாகக் கொண்டுள்ளது.

NLMC-01 இனது கருப்பொருள்: ***எனது தாய் நாட்டின் படம்***

### வெகுமதிகள்:

ஒவ்வொரு மட்டத்திலும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை வெல்பவர்களுக்கு சாதனைச் சான்றிதழ்கள் மற்றும் பணப்பரிசில்கள் வழங்கப்படும். அனைத்து சமர்ப்பிப்புகளும் கொழும்புப் பல்கலைக்கழக புவியியற்துறையால் பரிந்துரைக்கப்படும் நிபுணத்துவக் குழுவினால் மதிப்பாய்வுச் செய்யப்படும்.

### முக்கியமான தினங்கள்:

| | |
|---|---|
| சமர்ப்பித்தல் ஆரம்பம்: | ஜூன் 05 ஆம் திகதி 2021 |
| சமர்ப்பிப்புக்களுக்கான முடிவு: | செப்டம்பர் 05 ஆம் திகதி 2021 |
| வெற்றியாளர்களை அறிவித்தல்: | அக்டோபர் 05 ஆம் திகதி 2021 |

### சமர்ப்பித்தலுக்கான வழிகாட்டல்கள்:

1) சமர்ப்பிக்கும் மட்டங்கள் பின்வருமாறு கருத்திற்கொள்ளப்படும்:

**பாடசாலை மட்டம்:** க. பொ. த சாதாரண தரம் (O/L) மற்றும் க. பொ. த உயர்தரம் (A/L) மாணவர்கள் தகுதியுடையவர்கள்

**பல்கலைக்கழக மட்டம்:** 1ஆம், 2ஆம், 3ஆம், மற்றும் 4ஆம் வருட மாணவர்கள் தகுதியுடையவர்கள்

2) அனைத்து சமர்ப்பிப்புகளும் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு முறையாக பூர்த்தி செய்யப்பபட்ட **பட சமர்ப்பிப்புப் படிவத்துடன்** சமர்ப்பிக்கப்படல் வேண்டும்: **mapcontest@geo.cmb.ac.lk**

3) எந்தவொரு பொருத்தமான நிறம்(கள்)/வண்ணக் கலவை(கள்) பட தயாரிப்பில் பயன்படுத்தப்படலாம்.

4) அனைத்து சமர்ப்பிப்புக்களின் அளவு (அகலம் மற்றும் நீளம்) 11.69X16.54 அங்குலங்களாக இருத்தல் வேண்டும். (உதா: A3 தாள் அளவு)

5) உமது படங்களை ஊடுகதிர் (ஸ்கேன்) செய்து அல்லது புகைப்படம் எடுத்து PDF அல்லது JPEG வடிவங்களில் சேமிக்கப்பட்ட (Save) பின்னர் மதிப்பீடுகளுக்காக சமர்ப்பிக்க வேண்டும் (**உதாரணம்:** அனைத்து பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களிலான சமர்ப்பிப்புக்கள் மென் பிரதி (Soft copy) சமர்ப்பிப்புக்களாக இருத்தல் வேண்டும். கணினி உதவியுடன் வரையப்பட்ட படங்கள் மற்றும் கையால் வரையப்பட்டு சேமிக்கப்பட்ட படங்களின் தெளிவு (Resolution) 300-800 dpi இற்கு இடைப்பட்டதாகக் காணப்படல் வேண்டும்).

6) பாடசாலை மட்டத்திலான சமர்ப்பிப்புக்கள் அனைத்தும் கையால் வரையப்பட்ட படங்களாக இருத்தல் வேண்டும் (கணினி ஊடான வரைபடங்கள் அனுமதிக்கப்படமாட்டாது).

7) பல்கலைக்கழக மட்டத்திலான சமர்ப்பிப்புக்கள் கையால் வரையப்பட்ட படங்களாக அல்லது கணினி உதவியுடனான படங்களாக இருக்கலாம். கணினி உதவியுடனான படங்களை உருவாக்குவதற்காக எந்தவொரு மென்பொருளையும் பயன்படுத்த முடியும்.

8) அனைத்துப் படங்களும் புத்தாக்கமானதாகவும், சொந்தப் படைப்பாகவும் வேறு இடங்களில் சமர்ப்பிக்கப்படாதவையாகவும் அல்லது வெளியிடப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும்.

9) ஒரு மாணவர் ஒரு படத்தினை மாத்திரம் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவார்.

10) சமர்ப்பிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யாதச் சமர்ப்பிப்புகள் நிராகரிக்கப்படும் அல்லது தகுதியற்றவையாகக் கருதப்படும்.

**தொடர்புகளுக்கு:**

கலாநிதி. ஆனந்த கருணாரத்ன.
ஒருங்கிணைப்பாளர்,
தேசிய மட்டத்திலான பட வரைதல் போட்டி (NLMC-01),
புவியியற் துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்.
அலுவலக இலக்கம்: 0112-500458
கையடக்கக் கைத்தொலைபேசி இலக்கம்: 0714-905614
மின்னஞ்சல் முகவரி: **mapcontest@geo.cmb.ac.lk**